# இந்தியக் கல்வியாளர்களின் தத்துவச் சிந்தனைகள்

*ம. துர்காதேவி*
உதவிப் பேராசிரியர், வரலாற்றுத்துறை
ஸ்காட் கல்வியியல் கல்லூரி, சேரன்மகாதேவி

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: ஜூலை

வருடம்: 2022

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v10iS1-Jul.5020

## முன்னுரை

வேதகாலக் கல்வி முறையில் உள்ள குருகுல கல்வி முதல் இன்றைய புதிய கல்வி கொள்கை வரையிலும் ஒவ்வொரு தத்துவச் சிந்தனையாளர்களின் கல்வி சார்ந்த ததசுசுதுவச் சிந்தனைகளின் அடிப்படையிலேயே கல்வி முறையானது வடிவமைக்கப்படுகிறது. அதன் அடிப்படையில் பல ஆண்டுகளுக்கு முன்பாக நமது நாட்டின் சிந்தனையாளர்களர்கள் குறிப்பிட்ட கல்விச் சிந்தனைகள் அன்று முதல் இன்று வரை கல்வியில் தொடக்கக் கல்வி முதல் உயர் கல்வி வரை பின்பற்றப்பட்டு பல்வேறு மாற்றங்களைக் கொண்டு நவீன முறையில் சிறப்புற்று வருகின்றன. அந்த வகையில் இக்கட்டுரையானது மீண்டும் ஒருமுறை நம் நாட்டுச் சிந்தனையாளர்களின் சிந்தனைகளை நினைவுக்கு கொண்டு வரும் வகையில் அமைய உள்ளது.

## கல்வி

உலகில் வாழும் உயிரினங்களில் மனிதரிடத்தில் மட்டும் பகுத்தறிவும், அறிவு வளர்ச்சி பெறும் ஆற்றலும் சிறப்பாக அமைந்துள்ளன. உயிரியல், சமூகவியல் பண்புகள் ஆகிய இரண்டு பரிமாணங்களில் மனித வாழ்க்கையை நோக்கலாம். உயிரியல் பண்புகள் பெற்றோர் மக்கள் மக்களின் மக்கள் என்று மரபுக் கூற்றின்வழி தொடர்கின்றன. மனிதரின் சமூகப் பண்புகள் கல்வியின் விளைவாய் ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்குக் கொண்டு சேர்க்கப்படுகின்றன. இந்த வகையில் கல்வி அமைப்பும் அதை முறையாக அளிக்கும் பள்ளியும் மனிதருக்கு அதிகம் பயன்படும் சாதனங்களாக விளங்குகின்றன.

## கல்வி-விளக்கம்

கல்வி என்ற சொல் “educere” என்ற இலத்தீன் மொழிச் சொல்லிருந்து பிறந்ததாகச் சொல்லப்படுகிறது. “educere” என்பதற்கு வளர்தல் (to bring up) அல்லது “ஊட்டமளித்தல்” (to nourish) என்பது பொருளாகும். கல்வி குழந்தை வளர்ச்சியடைதலைக் குறிக்கும் ஒரு சொல்லாகப் பொருள் கொள்ளப்படுகிறது. “educere” என்பதற்கு “வழிகாட்டுதல்” (to lead out) அல்லது “வெளிக்கொணர்தல்” (to draw out) என்பன போன்ற கல்வி பற்றிய விளக்கங்கள் நோக்கத்தக்கன.

"கல்வி எனும் சொல் சமஸ்கிருதத்தில் "வித்யா" மற்றும் "சக்சுனா" என்று குறிக்கப்படுகிறது. "வித்யா" என்றால் "முழுமையாகப் புரிந்துகொள்ளுதல்" அல்லது "முழுமையான அறிவு" என்று விளக்கப்படுகிறது. "சக்சுனா" என்னும் சொல் சிக்சுனாவிலிருந்து பெறப்பட்டது. இதன் பொருள் கற்றல் அல்லது கற்பித்தல் என்று குறிக்கப்படுகிறது. கல்வி எனும் சொல் கிரேக்க மொழியில் "பெய்டியா" (paideia) என்றும் ஸ்பானிய மொழியில் "எடுகேசியன்" (educacian) என்றும் ஜெர்மன் மொழியில் "பில்டுங்" (Bildung) என்றும் அரேபிய மொழியில் "வட்தளிம்" என்றும் வழங்கப்படும் குறிப்புகள் எண்ணத்தக்கன.

கல்வி என்ற அதிகாரத்தில திருவள்ளுவர்

**"தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்**
**கற்றனைத்து ஊறும் அறிவு"(குறள் 396)**

என கல்வி என்பதற்கான விளக்கத்தைக் கூறியுள்ளார். இக்குறளில் உள்ள ஊறும் என்ற சொல்லின் மூலமாகக் கல்வி எனப்படுவது உள்ளே மறைந்திருக்கும் ஆற்றல்களையும் திறன்களையும் வெளிக்கொணர்வது என்று பொருள்படுகிறது.

## கல்வி பற்றிய இந்தியச் சிந்தனைகள்

கல்வி என்ற சொல்லுக்குக் கொள்ளப்படும் பொருளுக்கு ஏற்ப வரையறைகள் பலவிதமாக அமைகின்றன. அதனை கல்வி என்பது பற்றி இந்தியத் தத்துவ அறிஞர்கள் பல்வேறு விதமாகக் கருத்துகளைக் குறிப்பிட்டிருப்பது மூலமாகத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடிகிறது. "மனிதனைச் சுயசார்புடையவனாகவும் சுயநலமற்றவனாகவும் ஆக்கிவிடுவதே கல்வி" என ரிக் வேதம் குறிப்பிடும் கருத்தும் விவேகானந்தரின் "கல்வி என்பது மனிதனிடம் இயற்கையாக உறைந்துள்ள தெய்வீகமான முழுத்தன்மையை வெளிப்படுத்துவதாகும்" (education is the manifestation of divine perfection already existing in man) என்ற கருத்தும் "கல்வி என்பது குழந்தை மனிதனின் உடல் மனம் ஆன்மா ஆகிய மூன்றின் சிறப்பானவற்றையெல்லாம் முழுமையாக வெளிக்கொணர்வதாகும்" (by education I mean an all round drawing out of the best in child and man-body mind and spirit) என்ற மகாத்மா காந்தியடிகளின் கருத்தும இரவீந்தரநாத் தாகூர் "இவ்வுலக மாசுகளின் பிடியிலிருந்து நம்மை விடுவிக்கக்கூடிய இறுதி உண் மைகளை மனம் கண்டறிய உதவுவதே கல்வியாகும். (education means enabling the mind to find out te ultimate truth which emancipates us from the bondage of dust) என்பன போன்ற கல்வி பற்றிய விளக்கங்கள் கருதத்தக்கன

## இந்திய கல்வித் தத்துவ அறிஞர்கள்

கல்வித் தத்துவங்கள் பற்றிய அறிஞர்களின் சிந்தனைகள் காலங்கடந்து எல்லைகள் கடந்து இன்றும் கல்வி நடைமுறைகளில் பயன்படுகின்றன. நமது நாட்டில் தோன்றிய மிகப் பெரிய சிந்தனையாளர்களான விவோகானந்தர் தாகூர் காந்தியடிகள் அரவிந்தர் ஜே.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் பல்வேறுவிதமான கல்வித் தத்துவங்களை வழங்கியுள்ளனர்.

தாகூர் கண்ட இயற்கையோடு இணைந்து கற்பிக்கும் சாந்திநிகேதன் பள்ளி விவேகானந்தர் கூறிய மனிதரை உருவாக்கும் கல்வி காந்தியடிகளின் "வார்தா" எனும் ஆதாரக் கல்வித் திட்டம் அரவிந்தர் உருவாக்கிய ஆன்ம விடுதலையையும் பொருள் சார்ந்த வாழ்க்கை வளத்தையும் நல்கும் கல்வி ஜே. மூர்த்தியின் குழந்தைகளை அதன் போக்கில் அனுமதித்து அமைதிப்படுத்தும் வழிமுறைக் கல்வி ஆகியன மனிதரின் இயல்பான பண்புகளுக்குப் பொருத்தப்பாடு உடையவை. நமது நாட்டின் கல்விக் கொள்கைகளை உருவாக்கும் போதும் கலைத்திட்டத்தினை உருவாக்கும் போதும் பாடப்புத்தங்களை உருவாக்கும் போதும் வகுப்பறைக் கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளைத் திட்டமிடும்போதும் அறிஞர்களது தத்துவங்கள் நமக்குப் பெரிதும் துணைபுரிகின்றன.

## தாகூரின் கல்விச் சிந்தனைகள்

இரவீந்தரநாத் தாகூர் (1861-1941) கல்வியாளர் நாவலாசிரியர் நாடகக் கலைஞர் நாடக ஆசிரியர் கவிஞர் சிறுகதை எழுத்தாளர் ஓவியர் எனப் பன்முகங்களை

உடைய ஓர் ஒப்பற்ற நவீன இந்தியத் துறவியாகத் திகழ்ந்தார். இருபதாம் நூற்றாண்டில் நமது நாட்டுக் கல்வியியல் தத்துவத்திற்கும் கல்விச் செயல்முறைகளுக்கும் ஒரு புதிய பரிமாணம் சேர்ந்த பெருமையும் அவருக்கு உண்டு. **1913** ஆம் ஆண்டு "கீதாஞ்சலி" எனும் கவிதைத் தொகுப்பிற்காக நோபல் பரிசு பெற்றவர். தாகூரின் கல்வி நோக்கங்கள் குழந்தையின் உடல் வளர்ச்சி அறிவு வளர்ச்சி ஒழுக்க ஆன்மிக வளர்ச்சி சமூக வளர்ச்சி பன்னாட்டுச் சிந்தனைகளை இணைத்துக் கற்கும் கல்வி வளர்ச்சி ஆகியவற்றை ஒட்டியனவாக அமைந்திருந்தன.

### சுவாமி விவேகானந்தரின கல்விச் சிந்தனைகள்

இராமகிருஷ்ண பரமஹம்சருடைய ஆன்மிகச் சீடராக விளங்கிய நரேந்திரன் என்னும் விவேகானந்தர் இந்திய இளைஞர்களுக்கான கல்வி முறை எவ்வாறு அமைய வேண்டும் என்பதில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருந்தார். பாமர மக்களின் அறியமையையும் ஏழ்மையையும் நீக்கி அவர்களை முன்னேறச் செய்ய வேண்டும் என்பதையே தமது முதல் கடமையாகக் கொண்டு வாழ்ந்தார்.

மனிதரிடம் ஏற்கெனவே அமைந்துள்ள முழுமையின் வெளிப்பாடே கல்வியாகும். அறிவு மனிதரிடம் உள்ளுறையாக உள்ளது. அறிவு வெளியில் இருந்து வருவதில்லை. எல்லா மனிதருக்குள்ளும் புதைந்துள்ளது. ஒருவர் அறிந்து கொள்கிறார் என்பதற்கு அவர் கண்டுபிடிக்கிறார் அல்லது வெளிக்கொண்டு வருகிறார் என்பதுதான் கல்வி பற்றிய உளவியல் அடிப்படையிலான பொருளாகும் என்ற நம்பிக்கையைக் கொண்டிருந்தார் சுவாமி விவேகானந்தர்.

இந்திய கல்விக்கு கல்வியில் மனித நேயத்தை மீண்டும் துளிர்விடச் செய்தல் மனிதனை மனிதனாக ஆக்கி நற்பண்புகளுடன் திகழச் செய்தல் சாதி மத இன பேதமின்றி அனைவருக்கும் இலவசக் கட்டாயக் கல்வி அளிக்கப்படுதல் பள்ளிக் கலைத் திட்டத்தில் இந்தியப் பண்பாட்டுக் கூறுகளைப் பிரதிபலிக்கும் பாடத்துறைகள் இடம்பெறுவதற்கு முக்கியத்துவம் அளித்தல் சமூக சேவையைக் கல்வியின் முக்கியப் பகுதியாக இடம்பெறச் செய்தல் மேலை நாடுகளின் அறிவியல் தொழில்நுட்பம் ஆகியவற்றைக் கற்பிப்பதில் முனைப்புக் காட்டுதல் ஆகிய சிந்தனைகள் விவேகானந்தரின் பங்களிப்பாகும்.

### மகாத்மா காந்தியின் கல்விச் சிந்தனைகள்

"வார்தா" எனப்படும் அடிப்படைக் கல்வித் திட்டத்தின் அடிப்படையில் கல்வியானது ஒருவனது உடல் உள்ளம் ஆன்மா ஆகியவற்றின் வளர்ச்சிக்கு உதவ வேண்டும் என்பது காந்தியடிகளின் கருத்தாகும். ஆளுமை அழகுணர்வு ஒழுக்கம் ஆன்மா ஆகியவற்றின் இயைந்த வளர்ச்சியே கல்வியின் இறுதி நோக்கமாக இருக்க வேண்டும். எழுத்தறிவு மட்டும் பெறுவது கல்வியாகாது. பயனுள்ள ஒரு கைத்தொழிலைக் கற்பிப்பதன் வழியே குழந்தைகளின் கல்வியினைத் தொடங்குவது சிறந்தது என்பதில் காந்தியடிகள் முழு நம்பிக்கை கொண்டிருந்தார்.

மாணவரது ஆளுமையினை வளர்த்தல் தன்னிறைவு பெற அவர்க்கு உதவுதல் அவர்களிடம் காணப்படும் உயர்ந்த ஆன்மிகப் பண்புகள் வெளிப்பட்டு முழுமைபெற உதவுதல் போன்றவற்றைக் கல்வியின் நோக்கங்களாகக் காந்தியடிகள் கருதினார். எல்லா வகுப்பறைக் கல்வியும் கைத்தொழிலோடு தொடர்பு உள்ளது. மனப்பாடம் செய்து படிப்பதை அவர் ஆதரிக்கவில்லை. சுய அனுபவம் பெறத்தக்க வகையில் அனைவரும் கைத்தொழில் பயிற்சி பெற வேண்டும்.

தாய்மொழி வழியாகக் கற்பிக்க வேண்டும் உற்பத்தியுடன் இணைந்த கல்விச் செயல்முறை மாணவர்களும் ஆசிரியர்களும் பள்ளியிலேயே தங்கி எளிய கூட்டுறவு வாழ்க்கையை மேற்கொள்ளுதல் மாணவர்களின் தாய்மொழியே பயிற்று மொழியாக இருத்தல் சமய நன்னடத்தைக்கு முக்கியத்துவம் அளிக்கும் பயிற்சிகள் ஆகியன காந்தியடிகள் வலியுறுத்திய கற்பித்தல் முறையாகும்.

### அரவிந்தரின் கல்விச் சிந்தனைகள்

இங்கிலாந்தில் பதினான்கு ஆண்டுகள் கல்வி கற்ற அரவிந்தர் ஆங்கிலத்தைத் தவிர இலத்தீன் கிரேக்கம் ஜெர்மன் பிரெஞ்சு ஸ்பானி "மராத்தி குஜராத்தி வங்காளம்" ஆகிய மொழிகளையும் கற்றிருந்தார். இலக்கியங்கள் வேதங்கள் உபநிடதங்கள் ஆகியவற்றில் ஈடுபாடு கொண்டு அவற்றையும் நன்கு கற்றுத் தேர்ந்தவர் அவர்.

கல்வி என்பது உயிரோட்டம் இல்லாமல் முழுவதும் பழமையை அடிப்படையாகக் கொண்டு அமைதல் கூடாது. அதற்கு மாறாக நிகழ்காலத்தையும் அதன் தேவைகளை அடிப்படையாகக் கொண்டும் எதிர்காலத் தேவைகளை நிறைவு செய்வதாகும் அமைதல் இன்றியமையாதது என்பதே அரவிந்தரின் கல்வித் தத்துவமாகும்.

அரவிந்தரால் 1943-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட ஆசிரமப் பள்ளி இயற்கைச் சூழலில் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆசிரமப் பள்ளியில் ஒவ்வொரு நாள் செயல்பாடும் இறைவழிபாட்டுடனும் தியானத்துடனும் துவங்குகிறது. எளிய சத்துணவு உடற் பயிற்சிகள் விளையாட்டுகள் ஆகியவற்றில் தியாக உள்ளம் உள்ள ஆசிரியர்கள் மாணவர்களுக்குத் தனிப்பட்ட கவனம் செலுத்தி வருகின்றனர். இப்பள்ளி 1952-ஆம் ஆண்டு பன்னாட்டுப் பல்கலைக்கழகமாக மாறியுள்ளது. மாணவர்கள் தமக்குப் பிடித்த பாடத்தைத் தேர்ந்தெடுத்து தத்தம் கற்கும் வேகத்தின் அடிப்படையில் கற்க வாய்ப்பு அளிக்கப்படுகின்றது. குழந்தைககள் பன்னாட்டுக் கண்ணோட்டத்தில் வளர்க்கப்படுகின்றனர்.

### ஜே. கிருஷ்ணமூர்த்தியின கல்விச் சிந்தனைகள்

குழந்தைகளை அவற்றின் போக்கில் அனுமதித்து அமைதிப்படுத்தும் வழிமுறையே கல்வி எனப் புதுமையான கல்வித் தத்துவத்தை உருவாக்கித் தந்தவர் ஜே.கிருஷ்ணமூர்த்தி ஆவார். கல்வி கற்பதற்குச் செவிப்புலனால் கேட்பதும் புத்தங்களைப் படிப்பதும் மட்டும் போதாது. இதனால் அறிவுத் திணிப்புத் தான் மிஞ்சும் எனக் கூறியதோடு பார்த்ததையும் கேட்டதையும் படித்தையும் அகநிலையில் தன் அனுபவங்களுக்கு ஏற்பச் சுயமாகச் சிந்தித்தலே கற்றல் என்று விளக்கியவர் ஜே.கிருஷ்ணமூர்த்தி ஆவார்

பாடக் கூறுகளை ஒட்டுமொத்தமாக இணைத்த அவற்றைப் பயன்படுத்திச் சிந்தித்தாலே நமது தனித்தன்மை வெளிப்படும். அதுவே உண்மையான கற்றல் என்றும் குறிப்பிடுகிறார் ஜே.கிருஷ்ணமூர்த்தி. ஒருமுகப்படுத்திய சிந்தனையால் நம் புலன்களின் திறன்கள் அனைத்தும் குறிப்பிட்ட பொருள் அல்லது புள்ளியில் குவிக்கப்படுகின்றன என்பது ஜே.கிருஷ்ணமூர்த்தி.

கற்றலில் சுதந்திரம் என்பது மிகவும் இன்றியமையாதது என்பதைக் கற்பித்தல் நோக்கமாக உருவாக்கியவர் ஜே.கிருஷ்ணமூர்த்தி மாணவர்கள் தம்மைச் சுற்றியுள்ள யாவற்றையும் அனைத்துக் கருத்துக்களையும் எவ்வித நிர்பந்துமோ வற்புறுத்துதலோ இன்றி உற்றுநோக்கி அறிந்து பின்னர் யாவற்றையும் ஒட்டு மொத்தமாக ஆராயும் தன்மை பெற்றிருத்தலே உண்மையான கற்றல் என்று ஜே.கிருஷ்ணமூர்த்தி ஆணித்தரமாக நம்பினார்.

### நிறைவாக

இந்தியக் கல்வியாளர்களின் தத்துவச் சிந்தனைகள் என்ற இக்கட்டுரையானது மாணவர்களின் நலநலனை மட்டுமே கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்ட தத்துவச் சிந்தனைகள் மட்டுமே. தொடக்கக் கல்வி முதல் உயர் கல்வி வரை மாணவர்களின் உடல், உள்ளம், ஆன்மா போன்றவற்றில் எவ்வகையான வளர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்ற கருத்துக்களை உள்ளடக்கியதாக காணப்படுகிறது. இன்றும் பின்பற்றப்பட்டு வரும் கல்வி முறைகளில் இவர்களின் தாக்கம் அதிகம் உள்ளதையும் இக்கட்டுரை தெளிவுப்படுத்தியுள்ளது.